9. உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களைப் பேரவைப் பணிகளினின்று கூட்டத் தொடரின் எஞ்சிய நாட்களுக்கு நீக்கி வைத்ததை மறுபரிசீலனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் பேசுகின்றபொழுது, தே.மு.தி.க.-வை சார்ந்த நாங்கள் எல்லாம் ஏதோ இந்த அவைக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்பதைப்போல அவை முன்னவர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எல்லோருமே பேசுகிறார்கள். தயவுசெய்து அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். அதேபோல, அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபொழுது அங்கே இருக்கின்ற அவர்கள் எல்லோரும் அமைதியாக இருப்பதாகச் சொன்னார்கள். இதுவரையிலும் நாங்கள் ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்; எங்களுடைய தலைவரைப் பற்றி ஏதாவது ஒரு வகையிலே, அவரைக் களங்கப்படுத்துகின்ற விதத்திலே தரக்குறைவான வார்த்தைகளை எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் பகுதியிலே இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை தவறாகப் பேசியிருந்தால், இங்கே இருப்பவர்கள் (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. பேசியிருந்தால் எங்களைப்போலவே அங்கேயும் நடந்துகொண்டிருப்பார்கள். இதைத்தான் சொல்ல வருகிறேன். ஆகவே, இதிலே நாங்கள் எந்தவொரு தவறும் செய்யவில்லை. அதேபோல எங்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள்மீது எடுத்த—இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்க வேண்டுமென்ற—நடவடிக்கையை தாங்கள் இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, எங்கள் தலைவரைப் பற்றிப் பேசிய, எங்கள் மனம் புண்படுகின்றபடி பேசிய அந்த வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

பிற்பகல் 3-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர்*

அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பொதுவாகத்தான் பேசினார். பல கட்சிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. தேர்தல் கமிஷன் அங்கீகாரம் பெற்ற கட்சிகள் நிறைய இருக்கின்றன. தே.மு.தி.க. இருக்கிறது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இருக்கிறது. காங்கிரஸ் கட்சி இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சி இருக்கிறது. இதில் எந்த கட்சி என்று அவர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னார். புதுக்கோட்டை இடைத் தேர்தலில் சில கட்சிகள் வந்து போட்டியிடுவதற்கு ** இருக்கின்றது என்று சொன்னார். அதைத்தான் அவர் எடுத்துச் சொன்னார். அந்த வார்த்தை தங்களைத்தான் குறிப்பிடுகிறது என்றால், சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, கட்சிகள் புதுக்கோட்டை விஷயத்திலே தடுமாறுகின்றன; மாற்றி மாற்றி முடிவெடுக்கின்றன என்று சொல்லிக் கொண்டே வந்தார். வந்த பிறகு ஒரு கட்டத்திலே ** என்று சொன்னார். அது தங்கள் தலைவரை அவர் ஏதோ வேறு அர்த்தத்தில் சொல்வதைப்போல அவர்கள் உணருகிறார்கள். அது தொடர்பாக நீங்கள் முடிவெடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை இல்லை. Name mentioning என்று ஒன்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் அதைக் கவனிக்க வேண்டும். Name mentioning, அதாவது ஒரு பெயரைக் குறிப்பிட்டு ** என்று சொன்னால் அதை அவர்தான் என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், பெயரைக் குறிப்பிடாமல் இதை மாற்றி மாற்றி முடிவெடுக்கிறார்கள் என்றால், ** என்றால் ஏன் அந்த sense-ல் எடுத்துக் கொள்கிறீர்கள் என்று கேட்கிறேன்?

மாண்புமிகு ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில் நாம் பேசுகின்றபோதுகூட** சில நேரங்களில் நாம் பேசும்போதுகூட சில mistakes ஏற்பட்டு **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பிறகு அதைத் திருத்தி வாசிக்கிறோம். அந்த வார்த்தை தே.மு.தி.க. மாமன்ற உறுப்பினர்களுக்கு மன வருத்தத்தை அளிக்கிறது என்றால் இங்கே பேசியது, இவர்கள் பேசியது, உறுப்பினர் அவர்கள் பேசியது, நான் பேசியது ஆகிய எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கூறியபடி அனைத்தும் நீக்கப்படுகின்றன. அதாவது அந்த வார்த்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் சொன்னதுபோல், ** என்ற வார்த்தை மட்டும் நீக்கப்படுகிறது. மற்றவை எல்லாம் இருக்கும்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அவை முன்னவர் அவர்கள் சபை மரபு நடவடிக்கையில் எப்படி கண்ணியத்தைக் காக்க வேண்டும், செயல்பட வேண்டுமென்று ஒரு விரிவான விளக்கத்தை சிறப்பாகச் சொல்லியிருக்கிறார். அது பொதுவாக எல்லோருக்கும் பொருந்தும். அந்த அடிப்படையில் எதிர்க்கட்சியின் கொறடா அவர்களும், அதைச் சுட்டிக்காட்டிப் பேசி, இன்றைக்கு நடந்த அந்த அடிப்படையில் கொண்டு வந்திருக்கிற அந்த உரிமை மீறல் தீர்மானத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்ற அந்த வேண்டுகோளை வைத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது உரிமை மீறல் தீர்மானம் அல்ல. எஞ்சிய நாட்களுக்கான நடவடிக்கை.

திரு. எம். ஆறுமுகம்: சபை நடவடிக்கைதான். அந்த ஒரு வேண்டுகோளை வைத்திருக்கிறார். இந்தக் கூட்டத் தொடர் தற்போது முடியப்போகிற நேரம். அவை முன்னவரும் அதை ஆலோசித்து இதன்மீது ஒரு இறுதியான முடிவாக எடுத்து நீங்கள் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இப்போது அவையில் நடந்த அந்த விவாதத்திற்கு சம்பந்தப்பட்ட அந்த

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வார்த்தை என்பது சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அவையிலே சட்டப் பேரவை உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று மிக விளக்கமான ஆலோசனைகளை, மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்கிற அடிப்படையில், திரு. வெங்கடேசன்மீது முன்மொழிந்திருக்கிற அந்த நடவடிக்கையைத் தாங்கள் இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிய பிறகு அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள், அதன் தொடர்ச்சியாக உறுப்பினர்மீது எடுத்த நடவடிக்கைகளை முற்றாக நீக்கிவிட்டு அவரை மன்னித்து விடலாம் என்பதுதான் என் கருத்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினர் பேசுவதற்கு அதிகமாக வாய்ப்புக் கொடுக்கக்கூடிய தாங்கள் கண்ணியத்திற்குரியவர் சட்டம் படித்தவர்; வழக்கறிஞர்; திறமையாக அவையை நடத்துபவர். அதுபோல நம்முடைய அவை முன்னவரும் மிகவும் திறமையானவர்; இந்தச் சபையை நடத்துவதிலே பக்குவமானவர். இப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே, மறப்போம், மன்னிப்போம் என்ற முறையிலே அவர்மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது; விட்டுவிட வேண்டும்; ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

பிற்பகல் 3-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத்*

தலைவர் அவர்களே, சூடான கருத்து வேறுபாடுகள், வேகமான வாசகங்கள் இவையெல்லாம் பரிமாறப்பட்ட சூழலிலும், இந்த அவையிலே ஜனநாயக நெறிமுறைகள் பேணப்படுகின்றன என்பதை இப்போது நடைபெற்ற நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்தீர்கள். எல்லோருடைய கருத்துகளையும் பதிவு செய்ய வைத்திருக்கின்றீர்கள். எனவே, இந்த அடிப்படையிலே, நம்முடைய தே.மு.தி.க உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன்மீது எடுத்த நடவடிக்கையை மறுபரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பிரச்சினை தொடங்குவதற்குக் காரணமான வினை உங்களுடைய உத்தரவால் இரத்து செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, தொடர் வினைகள் வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்களுடைய suspension-ஐ இரத்து செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை நேரிலே சந்தித்து, தன்னிலை விளக்கம் கொடுத்ததற்குப் பின்னால், மறுபரிசீலனையை மாண்புமிகு சட்டப் பேரவை தலைவர் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருடைய வேண்டுகோள்களும் ஏற்கப்படுகின்றன. எனக்கு மாறுபட்ட கருத்து ஒன்றும் கிடையாது. ஆனால், ஒரு தனிபட்ட நபர் என்பது வேறு, பேரவைத் தலைவர் என்பது வேறு. இந்த நாற்காலி என்பது ஒரு பேரவைத் தலைவருக்கு உள்ள நாற்காலி. ஜெயக்குமார் வேறாக இருக்கலாம். ஆனால், பேரவைத்

தலைவர் வேறு. அப்படி இருக்கும்போது எந்த ஒரு செயலுமே, பேரவைத் தலைவருக்குக் களங்கம் கற்பிக்கின்ற செயலாக இருக்குமேயானால், நிச்சயமாக அதை அனுமதிக்க முடியாது. எனவே, அந்த அடிப்படையில்தான் அவர்மீது அந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு நான் தள்ளப்பட்டேன். எனவே, உங்களுடைய வேண்டுகோளை ஏற்று, நாளைக்கே என்னுடைய அறைக்கு வந்து அதுகுறித்து அவர் வருத்தம் தெரிவிப்பாரேயானால், நாளையேகூட அவர் அவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளலாம். எனக்கு அதிலே மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

திரு. வி.சி. சந்திரகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் கூறிய கருத்தை ஏற்று, எங்களுடைய உறுப்பினர் நாளைக்கு தங்களிடம் வந்து அதற்கான தன்னிலை விளக்கத்தை நிச்சயம் அளிப்பார், வருத்தம் தெரிவிப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நேரில் கண்டேன். மற்ற உறுப்பினர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்ததன் அடிப்படையில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. நான் ஒரு Ruling கொடுத்தபோது-"நீங்கள் அமருங்கள்" என்று சொன்னேன். "அவர் பேசிய பிறகு உங்களுடைய கொறடாவுக்கு வாய்ப்புத் தருகிறேன், என்று சொன்ன பிறகு, அவருடைய வாய் முணுமுணுத்தது. அந்த அடிப்படையில்தான் நான் அந்தக் கருத்தைச் சொன்னேன். எனவே, அவருடைய முகபாவம் மற்றும் செய்கைகள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு இருந்ததன் காரணமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டேன். எனவே, நாளைக்கு அவர் வரட்டும். அவர் வந்த பிறகு, நான் மறுபரிசீலனை செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.